ஸ்ரீமதே இராமாநுசாய நம:
ஸ்ரீ வரவர முநயே நம:

ஸ்ரீ சைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# ஆர்த்தி ப்ரபந்தம்

## தனியன்கள்

தேன்பயிலும்தாரான் எதிராசன்சேவடிமேல்*
தான்பரமபத்தி தலையெடுத்து*- மாந்தர்க்கு
உணவாக ஆர்த்தியுடன் ஒண்தமிழ்கள்செய்தான்*
மணவாளமாமுனிவன் வந்து.

வம்பவிழ்தார்வண்மை மணவாளமாமுனிகள்*
அம்புவியில் கால் பொருந்தா வார்த்தியினால்*- உம்பர்தொழும்
விண்ணுலகிற் செல்ல விரைந்தெதிராசன் பதங்கள் *
நண்ணியுரைத்தார் நமக்கு.

## நூல்

வாழியெதிராசன் வாழியெதிராசன் *
வாழியெதிராசனென வாழ்த்துவார்*-வாழியென
வாழ்த்துவார் வாழியென வாழ்த்துவார்*தாளிணையில்
தாழ்த்துவார் விண்ணோர் தலை.
(1)

இராமானுசாயநம வென்று சிந்தித்து *
இராமானுசரோடு இறைப்போழ்து*-இராமாறு
சிந்திப்பார் தாளிணையில் சேர்ந்திருப்பார் *தாளிணையை
வந்திப்பார் விண்ணோர்கள் வாழ்வு.
(2)

தந்தைநற்றாய் தாரம் தனயர்பெருஞ்செல்வம் *
என்தனக்கு நீயே எதிராசா *-இந்தநிலைக்கு
ஏராத இவ்வுடலை இன்றே அருத்தருளப் *
பாராததென்னோபகர்.
(3)

இந்தவுடற்சிறைவிட்டு எப்பொழுது யானேகி *
அந்தமில்பேரின்பத்துளாகுவேன் *-அந்தோ

இரங்காய் எதிராசா என்னை இனியுய்க்கை*
பரங்காண் உனக்கு உணர்ந்து பார்.

(4)

தன்புதல்வன் கூடாமல் தான் புசிக்கும் போகத்தால் *
இன்புறுமோ? தந்தை எதிராசா!*-உன்புதல்வன்
அன்றோ வுரையாய் யான்ஆதலால் *உன்போகம்
நன்றோ வெனை  யொழிந்த நாள்.

(5)

வேம்பு முற்றக் கைப்பு மிகுவதுபோல் *வெவ்வினையேன்
தீம்புமுற்றும் தேகமுற்றிச் செல்லுங்கால் *-ஆம்பரிசால்
ஏற்கவே சிந்தித்து எதிராசா!*இவ்வுடலைத்
தீர்க்கவே யான வழிசெய்.

(6)

அன்னைகுடிநீரருந்தி *முலையுண் குழவி
தன்னுடைய நோயைத் தவிராளோ?*-என்னே
எனக்கா எதிராசா! எல்லாம் நீசெய்தால் *
உனக்கது தாழ்வோ உரை.

(7)

தன் குழவி வான் கிணற்றை சார்ந்திருக்கக் கண்டிருந்தாள் *
என்பதன்றோ அன்னை பழி யேற்கின்றாள் *-நன்குணரில்
என்னாலே யென்னாகு மேலும் எதிராசா!*
உன்னாலே யாமுறவையோர்.

(8)

கூபத்தில்வீழும் குழவியுடன் குதித்து * அவ்
வாபத்தை நீக்கும் அந்த அன்னைபோல் *-பாபத்தால்
யான் பிறப்பேனேலும் இனி யெந்தை யெதிராசன் *
தான் பிறக்கு மென்னை யுய்ப்பதா.

(9)

பூமகள்கோன் தென்னரங்கர் பூங்கழற்குப் பாதுகமாய்த் *
தாம் மகிழும் செல்வச் சடகோபர் *-தேமலர்த்தாட்கு
ஏய்ந்தினிய பாதுகமாம் எந்தை இராமானுசனை *
வாய்ந்தெனது நெஞ்சமே! வாழ்.

(10)

உன்னையொழிய வொருதெய்வம் மற்றறியா *
மன்னுபுகழ்சேர் வடுகநம்பி *-தன்னிலையை
என்தனக்கு நீ தந்துஎதிராசா! *எந்நாளும்
உன்தனக்கே யாட்கொள் உகந்து.

(11)

தேசந்திகழும் திருவாய்மொழிப்பிள்ளை *
மாசில் திருமலையாழ்வார் * என்னை நேசத்தால்

எப்படியே எண்ணி நின்பால் சேர்த்தார் எதிராசா!*
அப்படியே நீ செய்தருள்.
(12)

எதிராசன்வாழி எதிராசன்வாழி *
எதிராசன்வாழி யென்றேத்திச் *-சதிராக
வாழ்வார்கள் தாளிணைக்கீழ் வாழ்வார்கள் பெற்றிடுவர் *
ஆழ்வார்கள் தங்களருள்.
(13)

அதிகாரமுண்டேல் அரங்கர் இரங்காரோ?*
அதிகார மில்லாதார்க்கன்றோ-எதிராசா!
நீயிரங்கவேண்டுவது * நீயும் அதிகாரிகளுக்
கேயிரங்கில் * என்செய்வோம் யாம்.
(14)

எம்பெருமானார் திருவடிகளே சரணம் *
என்பதுவே நாவுரைக்கும் இத்தாலென் *-அன்பவர்பால்
இப்போதளவும் யானொன்றும் காண்கின்றிலேன் *
எப்போது உண்டாவது இனி.
(15)

ஆகாது தீதென்றறிந்தும் பிறர்க்கு உரைத்தும்
ஆகாததேசெய்வனாதலால் *-மோகாந்த
னென்றுநினைத்து என்னை இகழேல் எதிராசா!*
என்று உன்னடி சேர்வன் யான்.
(16)

பொல்லாங்கனைத்தும் பொதிந்துகொண்டு * நன்மையிலொன்
றில்லா வெனக்கும் எதிராசா!*- நல்லார்கள்
நண்ணும் திருநாட்டை நான் தருவனென்று நீ *
தண்ணென் றிருக்கிற தென் தான்.
(17)

என்று விடுவது எனக்கு எந்தாய் எதிராசா!*
ஒன்றும் அறிகின்றிலேன் உரையாய் *-குன்றாமல்
இப்படியே இந்தவுயிர்க் கென்றும் இருளே விளைவிக்கும் *
இப்பவமாம் நீண்ட இரவு.
(18)

அல்லும் பகலும் யானாக்கை வழியுழன்று *
செல்லுமது உந்தேசுக்குத் தீங்கன்றோ?*-நல்லார்கள்
தந்தனயர் நீசர்க் காட்செய்யச் சகிப்பரோ?*
எந்தை யெதிராசா! இசை.
(19)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

போம் வழியைத் தருமென்னுமின்பமெல்லாம்
புசித்து வழிபோய் அமுத விரசையாற்றில் *
நாம்மூழ்கி மலமற்றுத்தெளிவிசும்பை
நண்ணி நலந்திகழ் மேனிதன்னைப் பெற்று*
தாம் அமரர்வந்தெதிர்கொண்டு அலங்கரித்துச்
சற்கரிப்ப மாமணி மண்டபத்துச் சென்று *
மாமலராள்கோன் மடியில் வைத்துகக்கும்
வாழ்வு* நமக்கு எதிராச னருளும் வாழ்வே.

(20)

கட்டளைக்கலித்துறை

திருமலையாழ்வார் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால் *
தரு மதிகொண் டவர்தம்மை யுத்தாரகராக வெண்ணி
யிருமனமே * அவர்க்கா யெதிராச ரெம்மைக் கடுகப்
பரமபதந்தன்னி லேற்றுவர் *என்ன பயம் நமக்கே.

(21)

தீதற்ற ஞானத் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால் *
ஏதத்தை மாற்று மெதிராசர் தம்மபிமான மென்னும் *
போதத்தை யேறிப் பவமாம் புணரிதனைக் கடந்து *
கோதற்ற மாதவன் பாதக் கரையைக் குறுகுவனே.

(22)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அடியார்கள் குழாங்க ளழகோலக்க மிருக்க
ஆநந்த மயமான மாமணி மண்டபத்து *
படியாதுமில் படுக்கையா யிருக்கு மனந்தன்
பணாமணிகள் தம்மி னொளி மண்டலத்தினிடையில் *
வடிவாரும் மாமலராள் வலவருகும் மற்றை
மண்மகளு மாய்மகளும் மிடவருகும் மிருக்க*
நடுவாக வீற்றிருக்கும் நாரணனைக் கடுக
நானனுபவிக்கும் வகை நல்கென் எதிராசா!

(23)

இந்த வுடல்விட் டிரவிமண்டலத் தூடேகி
இவ்வண்டங்கழித் திடையில் ஆவரண மேழ்போய் *
அந்தமில் பாழ்கடந் தழகார் விரசைதனிற் குளித்து அங்கு
அமானவனா லொளிக்கொண்ட சோதியும் பெற்று *
அமரர்வந் தெதிர்கொண்ட லங்கரித்து வாழ்த்தி வழிநடத்த
வைகுந்தம் புக்கு மணி மண்டபத்துச் சென்று *
நந் திருமாலடியார்கள் குழாங்களுடன் கூடும்
நாளெனக்குக் குருகும் வகை நல்கென்னெதிராசா!

(24)

என்று நிரேதுகமாக வென்னை யபிமானித்து
யானுமறிந் துனக்கேயா யிருக்கும் வகை செய்தாய் *
அன்றுமுத லின்றளவும் அநவரதம் பிழையே
அடுத்தடுத்துச் செய்வ தநுதவிப்ப தினிச்செய்யேன் *
என்றுனை வந்திரப்பதா மென்கொடுமை கண்டும்
இகழாதே யிரவுபக லடிமைகொண்டு போந்தாய் *
இன்று திருநாடு மெனக்கருள வெண்ணுகின்றாய்
இனிக் கடுகச் செய்தருளவேண்டும் எதிராசா!
(25)

தென்னரங்கர் தமக்காமோ? தேவியர்கட் காமோ?
சேனையர்கோன் முதலான சூரியர்கட் காமோ?*
மன்னிய சீர்மாறன் அருள்மாரி தமக்காமோ?
மற்றுமுள்ள தேசிகர்கள் தங்களுக்குமாமோ?*
என்னுடைய பிழை பொறுக்க யாவருக்கு முடியும்?
எதிராசா! உனக்கன்றி யானொருவர்க் காகேன் *
உன்னருளா லெனக்கு ருசிதன்னையும் முண்டாக்கி
ஒளிவிசும்பிலடியேனை யொருப்படுத்து விரைந்தே.
(26)

இவ்வுலகில் இனியொன்று மென்னாதே நெஞ்சே
இரவுபக லெதிராச ரெமக் கினிமே லருளும் *
அவ்வுலகை யலர்மகள்கோ னங்கிருக்கும் இருப்பை
அடியார் குழாங்கள்தனை அவர்களநுபவத்தை *
இவ்வுயிருமதுக் கிட்டுப் பிறந் திழந்துகிடந்த
தென்னுமத்தை யென்றுமதுக் கிடைச் சுவராய்க் கிடக்கும் *
வெவ்வினையால் வந்தவுடல் விடும்பொழுதை விட்டால்
விலையு மின்பந்தன்னை முற்றும் விடாமலிருந்தெண்ணே.
(27)

பண்டு பலவாரியரும் பாருலகோருய்யப்
பரிவுடனே செய்தருளும் பலகலைகள் தம்மைக் *
கண்டதெல்லா மெழுதி யவை கற்றிருந்தும் பிறர்க்குக்
காதலுடன்கற்பித்தும் காலத்தை கழித்தேன் *
புண்டரீகை கேள்வனுறை பொன்னுலகுதன்னில்
போக நினைவொன்று மின்றிப் பொருந்தி யிங்கே யிருந்தேன்*
எண்டிசையு மேத்துமெதிராச னருளாலே
எழில் விசும்பையன்றி யிப்போதென்மன மெண்ணாதே.
(28)

<u>பதினான்கு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்</u>
சாருவாக மதம் நீறுசெய்து சமணச்செடிக்கனல் கொளுத்தியே
சாக்கியக் கடலை வற்றுவித்து மிகுசாங்கியக்கிரி முறிந்திட *
மாறுசெய்திடுகணாத வாதியர்கள் வாய்தகர்த்தறமிகுத்துமேல்
வந்த பாசுபதர் சிந்தியோடும் வகைவாதுசெய்த எதிராசனார்*

கூறுமாகுரு மதத்தொ டோங்கிய குமாரிலன்மத மவற்றின் மேல்
கொடிய தர்க்கசரம்விட்டபின் குறுகிமாயவாதியரைவென்றிட *
மீறிவாதில்வரும் பாற்கரன்மத விலக்கடிக் கொடி யெறிந்துபோய்
மிக்கயாதவமதத்தைமாய்த்த பெருவீரர்நாளும்மிக வாழியே.
(29)

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

சீராருமெதிராசர் திருவடிகள் வாழி
திருவரையிற் சாத்திய செந்துவராடை வாழி*
ஏராரும்செய்யவடிவு எப்பொழுதும்வாழி
இலங்கிய முந்நூல் வாழி இணைதோள்கள் வாழி*
சோராத துய்ய செய்ய முகச்சோதி வாழி
தூமுறுவல் வாழி துணைமலர்க் கண்கள் வாழி*
ஈராரும் திருநாமமணிந்த எழில்வாழி
இனிதிருப்போடெழில் ஞானமுத்திரை வாழியே.
(30)

அறுசமயச் செடியதனை யடியருத்தான் வாழியே
அடர்ந்துவரும் குதிட்டிகளை யறத்துரந்தான் வாழியே *
செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்து விட்டான் வாழியே
தென்னரங்கர் செல்வமுற்றும் திருத்திவைத்தான் வாழியே *
மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே
மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே *
அறம்மிகுநற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே.
(31)

பன்னிருசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

சங்கர பாற்கரயாதவ பாட்டப்பிரபாகரர் தங்கள் மதம்
சாய்வுறவாதியர் மாய்குவரென்று சதுமறைவாழ்ந்திடுநாள் *
வெங்கலியிங்கினிவீறு நமக்கிலை யென்று மிகத்தளர்நாள்
மேதினி நஞ்சுமை யாறுமெனத் துயர்விட்டு விளங்கியநாள் *
மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வுமுளைத்திடுநாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்று முவந்திடுநாள் *
செங்கயல் வாவிகள் சூழ் வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர்ச்
சீமானிளை யாழ்வார் வந்தருளியநாள் திருவாதிரைநாளே.
(32)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

இன்ன மெத்தனைகாலமிந்தவுடம்புடன் யானிருப்பேன்?
இன்னபொழுதுடம்புவிடு மின்னபடியதுதான் *
இன்னவிடத்தேயதுவு மென்னு மிவையெல்லாம்
எதிராசா! நீயறிதி யானிவை யொன்றறியேன் *
என்னையினியிவ்வுடம்பை விடுவித் துன்னருளால்
ஏராரும் வைகுந்தத் தேற்ற நினைவுண்டேல் *
பின்னைவிரையாமல் மறந்திருக்கிறதென்? பேசாய்
பேதைமை தீர்த்தெனை யடிமைகொண்ட பெருமானே!
(33)

முன்னைவினை பின்னைவினை பிராரத்தமென்று
மூன்று வகையான வினைத்தொகை யனைத்தும் * யானே
என்னை யடைந்தோர் தமக்குக் கழிப்பனெனு மரங்கர்
எதிராசா! நீயிட்ட வழக்கன்றோ? சொல்லாய் *
உன்னையல்லதறியாத யானிந்த வுடம்போ
டுழன்று வினைப்பயன்புசிக்க வேண்டுவ தொன்றுண்டோ *
என்னுடைய விருவினையை யிறைப்பொழுதின் மாற்றி
ஏராரும் வைகுந்தத் தேற்றிவிடாய் நீயே.
(34)

அருளாலேயடியேனை யபிமானித்தருளி
அநவரத மடிமைகொள்ள நினைத்து நீயிருக்க *
மருளாலே புலன் போகவாஞ்சைசெயு மெந்தன்
வல்வினையை மாற்றி யுன்பால் மனம்வைக்கப் பண்ணாய் *
தெருளாரும் கூரத்தாழ்வானு மவர் செல்வத்
திருமகனார் தாமு மருளிச்செய்த *தீமைத்
திரளான தித்தனையும் சேரவுள வென்னைத்
திருத்தி யுயக்கொள்ளும் வகை தேரு மெதிராசா!
(35)

நேரிசை வெண்பா

வாசனையி லூற்றமோ மாளாத வல்வினையோ *
ஏதென்றறியே னெதிராசா!*-தீதாகும்
ஐம்புலனிலாசை யடியேன் மனந்தன்னை *
வன்புடனே தானடரும் வந்து.
(36)

இன்றளவு மில்லாத அதிகாரம் *மேலுமெனக்
கென்றுளதாம் சொல்லா யெதிராசா!*-குன்றா
வினைத்தொடரை வெட்டிவிட்டு *மேலை வைகுந்தத்
தெனைக் கடுக வேற்றாத தென்.
(37)

அஞ்சிலறியார் ஐம்பதிலும் தாமறியார் *
என்சொல் லெனக்கோ வெதிராசா!*-நெஞ்சம்
உனதாளொழிந்தவற்றையே யுகக்க * இன்றும்
அனுதாப மற்றிருக்கையால்.
(38)

வேம்பு கறியாக விரும்பினார் கைத்ததென்று *
தாம் பொகடாதே புசிக்கும் தன்மைபோல் *-தீம்பனிவ
னென்று நினைத்தென்னை யிகழாரெதிராசர் *
அன்றறிந்து அங்கீகரிக்கையால்.
(39)

அவத்தேபொழுதை யடியேன் கழித்து * இப்
பவத்தேயிருக்குமது பண்போ?-திவத்தே யான் *
சேரும் வகையருளாய் சீராரெதிராசா!*
போருமினி யிவ்வுடம்பைப் போக்கு.
(40)

எனைப்போல் பிழைசெய்வா ரிவ்வுல கிலுண்டோ *
உனைப்போல் பொறுக்க வல்லாருண்டோ?*-அனைத்துலகும்
வாழப் பிறந்த வெதிராச மாமுனிவா! *
ஏழைக் கிரங்கா யினி.
(41)

ஐம்புலன்கள்மேலிட் டடரும்பொழு தடியேன் *
உன் பதங்கள்தம்மை நினைந்தோலமிட்டால் *-பின்பவைதாம்
என்னை யடராம லிரங்கா யெதிராசா!*
உன்னையல்லாதா ரெனக்குண்டோ.
(42)

இந்த வுலகிற் பொறுந்தாமை யேதுமில்லை *
அந்த வுலகிற் போக வாசை யில்லை *-இந்த நமக்
கெப்படியோதான் தருவரெந்தை யெதிராசர் *
ஒப்பில் திருநாடுகந்து.
(43)

மாகாந்த நாரணனார் வைகும் வகை யறிந்தோர்க்கு *
ஏகாந்தமில்லை யிருளில்லை *-மோகாந்தர்
இவ்விட மேகாந்த மிருளென்று பயமற்றிருந்து *
செய்வர்கள் தாம் பாவத்திறம்.
(44)

நாராயணன் திருமால் நாரம் நாமென்னு முறவு *
ஆராயில் நெஞ்சே அநாதியன்றோ?*-சீராரும்
ஆசாரியனாலே யன்றோ நாமுய்ந்ததென்று *
கூசாம லெப்பொழுதும் கூறு.
(45)

திருவாய்மொழிப்பிள்ளை தீவினையோந் தம்மைக் *
குருவாகி வந்துய்யக்கொண்டு *-பொருவில்
மதிதா னளித்தருளும் வாழ்வன்றோ நெஞ்சே!*
எதிராசர்க் காளானோம்யாம்.

(46)

கட்டளைக் கலித்துறை

இராமாநுசாயநமவென் றிரவும் பகலும் சிந்தித்து *
இராமாநுசர்க ளிருப்பிடந்தன்னி லிறைப்பொழுதும் *
இராமாநுசரவர்க் கெல்லாவடிமையுஞ் செய்யவெண்ணி *
இராமாநுசர்தம்மை மாநுசரா வென்கொலெண்ணுவதே.

(47)

எண்ணாதென்னெஞ்ச மிசையாதென்நா இறைஞ்சாதுசென்னி *
கண்ணானவையொன்றும் காணலுறா *கலியார் நலிய
வொண்ணாத வண்ண முலகளித்தோனெதிராசனடி
நண்ணாதவரை *அரங்கேசர் செய்த நலம் நமக்கே.

(48)

நந்தா நரகத் தழுந்தாமை வேண்டிடில் நானிலத்தீர்!*
எந்தாதையான வெதிராசனை நண்ணும் *என்றுமவ
னந்தாதிதன்னை யனுசந்தியு மவந்தொண்டருடன் *
சிந்தா குலம்கெடச் சேர்ந்திரும் முத்தி பின் சித்திக்குமே.

(49)

அவத்தேயருமந்த காலத்தைப் போக்கி *அறிவின்மையால்
பவத்தே யுழல்கின்ற பாவியர்காள் *பலகாலம்நின்று
தவத்தே முயல்பவர் தங்கட்கு மெய்தவொண்ணாத * அந்தத்
திவத்தே யுமை வைக்கும் சிந்தியும் நீரெதிராசனென்றே.

(50)

என்றுள னீசனுமுயிரு மன்றேயுண் டிக்காலமெல்லாம் *
இன்றளவாகப் பழுதே கழிந்ததிருவினையால் *
என்றிழவின்றி யிருக்குமென்னெஞ்ச மிரவுபகல்
நின்றுதவிக்கும் *எதிராசா! நீயருள்செய்த பின்னே.

(51)

நேரிசை வெண்பா

கனக கிரிமேல் கரிய முகில்போல் *
வினதை சிறுவன் மேற்கொண்டு *-தனுவிடும்போது
ஏராரரங்கர் எதிராசர்க்கா *என்பால்
வாரா முன்னிற்பர் மகிழ்ந்து.

(52)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

இதத்தாலே தென்னரங்கர் செய்கிற தென்றறிந்தே
யிருந்தாலும் தற்கால வேதனையின் கனத்தால் *

பதைத்தாவோ என்னுமிந்தப் பாவவுடம்புடனே
பலநோவு மநுபவித் திப்பவத்திருக்கப்போமோ? *
மதத்தாலே வல்வினையின் வழியுழன்று திரிந்த
வல்வினையேந்தன்னை யுனக் காளாக்கிக் கொண்ட *
இதத்தாயும் தந்தையுமா மெதிராசா! என்னை
இனிக் கடுக விப்பவத்தினின்று மெடுத்தருளே.
(53)

கட்டளைக்கலிப்பா

இன்ன மெத்தனை நாளிவ் வுடம்புடன்
இருந்து நோவுபடக்கடவேனையோ!*
என்னை யிதினின்றும் விடுவித்து நீர்
என்று தான் திருநாட்டினு ளேற்றுவீர்?*
அன்னையு மத்தனு மல்லாத சுற்றமும்
ஆகி யென்னை யளித்தருள் நாதனே!*
என்னிதத்தை யிராப்பக லின்றியே
ஏக மெண்ணு மெதிராச வள்ளலே!
(54)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

தென்னரங்கர் சீரருளுக் கிலக்காகப் பெற்றோம்
திருவரங்கம் திருப்பதியே யிருப்பாகப் பெற்றோம் *
மன்னியசீர் மாறன்கலை யுணவாகப் பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம் *
முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்
முழுதும் நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம் *
பின்னை யொன்றுதனில் நெஞ்சு பேராமல் பெற்றோம்
பிறர்மினுக்கம் பொறாமையில்லாப்பெருமையும் பெற்றோமே.
1 (55)

நேரிசை வெண்பா

உன்த னபிமானமே யுத்தாரகமென்று *
சிந்தை தெளிந்திருக்கச் செய்த நீ *-அந்தோ!
எதிராசா! நோய்களா லென்னை நலக்காமல் *
சதிராக நின் திருத்தாள் தா.
(56)

தேசிகர்கள் போற்றும் திருவாய்மொழிப்பிள்ளை *
வாசமலர்த் தாளடைந்த வத்துவெனும் *-நேசத்தால்
என் பிழைகள் காணா வெதிராசரே!* அடியேன்
புன் பகர்வைக் கேளும் பொறுத்து.
(57)

எந்தை திருவாய்மொழிப்பிள்ளை யின்னருளால் *
உந்தனுறவை யுணர்ந்தபின் *-இந்தவுயிர்க்

கெல்லா வுறவும் நீ யென்றே யெதிராசா!*
நில்லாத துண்டோவென் நெஞ்சு.

(58)

எந்தை திருவரங்க ரேரார் கருடன்மேல் *
வந்து முகங்காட்டி வழிநடத்த *-சிந்தைசெய்திப்
பொல்லா வுடம்புதனைப் போக்குவதெந்நாள் கொலோ?*
சொல்லா யெதிராசா! சூழ்ந்து.

(59)

இந்த வரங்கத் தினிதிருநீ யென்றரங்கர் *
எந்தை யெதிராசர்க் கீந்தவரம் *-சிந்தைசெய்யில்
நம்மதன்றோ நெஞ்சமே! நற்றாதை சொம்புதல்வர்
தம்மதன்றோ தாயமுறை தான்.

(60)

அடிவரவு:- வாழி இராமானுசாய தந்தை இந்தவுடல் தன்புதல்வன் வேம்புமுற்ற அன்னைகுடி தன்குழவி கூபத்தில் பூமகள் உன்னை தேச எதிராசன் அதிகாரம் எம்பெருமானார் ஆகாத பொல்லாங்கு என்று அல்லும் போம்வழி திருமலை தீதற்ற அடியார்கள் இந்த என்றுநிரேதுகம்
தென்னரங்கர் இவ்வுலகில் பண்டுபல சாருவாக சீராரும் அறுசமயம் சங்கர இன்ன முன்னைவினை அருளாலே வாதனையில் இன்றளவும் அஞ்சில் வேம்புகறி அவத்தே எனைப்போல் ஐம்புலன் இந்தவுலகு மாகாந்த நாராயணன் திருவாய் இராமானுச எண்ணாதென் நந்தா அவத்தே என்றுளன் கனககிரி இதத்தாலே இன்னமெத்தனை தென்னரங்கர் உன்றன் தேசிகர்கள் எந்தைதிருவாய் எந்தை இந்தவரங்கத்து.

ஆர்த்திப்ரபந்தம் ஸம்பூர்ணம்
பெரிய ஜீயர் திருவடிகளே சரணம்